முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் யோகச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

27.10.2018, சனிக்கிழமை

1. **தருமராசனே தலைமை ஞானியின்**
**தவ சூட்சுமமே சடாட்சர ஒலியின்**
**ஆறுமுகனாரின் அவதார வடிவே**
**அண்ணலே அரங்கமகா ஞானியே**

2. ஞானியே உன் பெருமை கூறி
ஞாலமதில் ஒளி சூட்சும நூலை
இனிமைபட **விளம்பி துலை திங்கள்**
**ஈரைந்து திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 10ம் நாள் 27.10.2018, சனிக்கிழமை)**

3. **வாரமதில் யோகச்சித்தர் யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலமுற
வாராந்திர வழிபாடாக அரங்கனை
வந்து வணங்கும் மக்களுக்கு

4. மக்களுக்கு ஞானிகள் ஆசியும்
மண்ணுலகில் சுப்பிரமணியர் அருளும்
தேக்கமிலா கிட்டி வளம் காணும்
தேசிகன் சக்தி மலையாகவுள்ள

5. உள்ளதொரு குமரகிரி தன்னை
உலகோர் கண்டு வணங்கி
வல்லமைபட தருமமிட உதவி
வாழ்வாதாரம் சிறக்க சித்தர் பூசை

6. பூசைதனை செய்து கொண்டு
புத்திர வரம் ஆரோக்கிய பலம்
நேசமுடன் பிறவி நிலை அறுக்கும்
நிலவுலகின் சத்ய பூசையான

7. பூசையான கோ பூசை கலந்து
புகலுவேன் கோவிற்கு தருமம்
ஆசை விலக்கும் தயவு பெருக
அவசியம் அன்பர்கள் கலந்து

8. கலந்து தொண்டுகள் செய்து
காய்கனி பூசை வழி தருமம்
வளமுற செய்து வருகவே
வாரிசு பலம் வம்ச விருத்தி

9. விருத்தியான அருள் பொருள் வளம்
வேலவன் துணைபட கண்டு
கருத்தாக உலக மக்களெல்லாம்
கடைத்தேறுவர் என்பேன்

10. என்கவே யோக ஞான
எண்ணிலா கோடி சித்தர்களை
நன்மை கருதி நாளும் வணங்கி
நாமசெபமாக செய்து வருக

11. வருகவே மேல்நிலை பெறுவர்
வறுமை ருண ரோகமில்லா
மாறுதலும் ஆறுமுகன் அருள்பட
மரணமில்லா பெருவாழ்வும் அடைவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் யோகச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா தருமங்களைச் செய்து உலகின் தர்மசக்தியை அதிகரிக்க செய்து தருமபலத்தினால் உலகினை காக்கின்ற தர்மராசனே தலைமை ஞானியாம் அகத்தியர் பெருமானின் சூட்சுமமே ஞானத்தலைவனாம் ஞானப்பேரொளியாம் சடாட்சர ஒளியாம் சரவணஜோதி முருகப்பெருமானின் அவதார வடிவமே அண்ணலே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 10ம் நாள் 27.10.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே யோகச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் யோகச்சித்தர்.

வாரந்தோறும் ஆறுமுக அரங்கனை வந்து வணங்குகின்ற மக்களுக்கு அரங்கனை வணங்கி வழிபட்ட காரணத்தினாலே ஞானிகள் ஆசியும் ஞானத்தலைவன் சுப்பிரமணியராகிய முருகப்பெருமானின் ஆசியும் அருளும் தடையின்றி தாராளமாய் கிடைத்து அவர்களது குடும்பமே வளம் காணும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனின் அருள் சக்தியானது மலைபோல் குவிந்து கிடக்கின்ற துறையூர் குமரகிரிக்கு உலக மக்கள் பயபக்தியுடன் சென்று வணங்கி நீங்கள் வல்லமை பெறும் வகையில் தர்மங்களைச் செய்து உங்களது வாழ்வாதாரம் சிறந்திட திருக்கோயிலில் சித்தர்கள் பூசைதனை பக்தியுடன் செய்து பின்பு ஆங்கே நடக்கின்ற சிறப்பு பூஜையாம் புத்திர பாக்கியத்தையும், ஆரோக்கியத்தையும், ஆயுள் பலத்தினையும் தரவல்லதும் பிறவிப்பிணியை அறுத்து பிறவா நிலையையும் தந்தருளவல்ல உண்மை வழிபாடாம் கோபூஜையில் கலந்து கொண்டு சித்தர்களை வழிபாடுகள் செய்வதுடன் ஆசையை அறுத்து தயவினை பெருக்கும் வல்லமைமிக்க தர்மமாகிய கோதர்மம் எனப்படுகின்ற பசுவிற்கு உணவளிக்கும் தர்மத்தினை அளிக்கும் நிகழ்விலே அன்பர்கள் அவசியம் கலந்து கொண்டு உங்களது பங்களிப்பை அளித்து ஆங்கே நடக்கின்ற குமரகிரி அறப்பணிகளிலே தொண்டுகள் செய்து காய்கனிகளையும் பூசைகள் செய்வதற்கு பொருளுதவிகள் செய்தும் வரவர, தர்மங்களை உள்ளன்போடு தயவுடன் செய்திட்ட அன்பர்கள் வாழ்விலே வாரிசுபலம் உண்டாகும், அவர்களது வம்சம் விருத்தியாகி விளங்கி நிற்கும் அருள் வளம் பெருகும், பொருள் வளம் பெருகும், இவையனைத்தும் குமரகிரி ஆண்டவர் முருகப்பெருமானின் துணையினால் கிடைக்கப் பெற்று உலக மக்களெல்லாம் கருத்துடன் தயவு பெருகி ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வார்கள் என யோகச்சித்தர் யானும் உரைக்கின்றேன்.

ஆதலினால் உலக மக்களே யோகஞான சித்தி பெற்றிட்ட எண்ணிலா கோடி சித்தர்களை உங்களது நன்மை கருதி நீங்கள் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளும் பொருட்டு நாளும்நாளும் தவறாமல் பயபக்தியுடன் வணங்கி நாமஜெபங்களை செய்து வர வேண்டும்.

சித்தர்கள் நாமஜெபங்களை தவறாமல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாக ஜெபித்து பாராயணம் செய்து வரவர, நீங்களெல்லாம் மேல்நிலையை அடைவீர்கள், வறுமையற்ற வாழ்வை பெறுவீர்கள், கடன்சுமை இல்லாத வாழ்வை பெறுவீர்கள், நோயற்ற வாழ்வை பெறுவீர்கள், முருகப்பெருமானின் அருளாசியினால் மரணமிலாப் பெருவாழ்வையும் அடைந்து சிறப்படைவீர்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் யோகச்சித்தர்.

–சுபம்–